# பத்திரிக்கை செய்தி

## நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் உவர்நீர் இறால் வளர்ப்பிற்கான காப்பீடு திட்டம் வெளியிடுதல் நிகழ்ச்சி 21.11.2022 அன்று நாகப்பட்டினம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது

நாகப்பட்டினத்தில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 21.11.2022 அன்று உலக மீன்வள தினத்தை முன்னிட்டு நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் உவர்நீர் இறால் வளர்ப்பிற்கான காப்பீடு திட்டம் வெளியிடுதல் நிகழ்வு காலை 10.30 மணியளவில் துவங்கப்பட்டது. இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் Dr. A. அருண் தம்புராஜ் அவர்கள், வருகை தந்து சிறப்புரை ஆற்றி மீன், இறால் வளர்ப்புக் காப்பீடு திட்டங்களை வெளியிட்டு இவ்விழாவை சிறப்பித்தார். மேலும், மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். கோ. சுகுமார் அவர்கள், தலைமை உரை ஆற்றினார். ஓரியன்ட்ல் காப்பீடு நிறுவனத்தின் தலைமை மேலாளர் திரு. B. K. சின்ஹா அவர்கள், இந்த காப்பீடு திட்டத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் தலைஞாயிறு டாக்டர். எம். ஜி. ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர். சு. பாலசுந்தரி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இந்த விழாவில் தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டு கழகத் தலைவரான திரு. N. கௌதமன் அவர்களும், வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினரான திரு. O. S. மணியன் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். N. பெலிக்ஸ் அவர்களும், ஆராய்ச்சி இயக்குனர் முனைவர். J. ஸ்டீபன் சம்பத் குமார் அவர்களும், சிறப்புரையாற்றினார்கள். இந்த நிகழ்வின் போது தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்துடன் அலையன்ஸ் காப்பீடு நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்ததில் கையெழுத்திட்டது.

இந்த நிகழ்வில் 132 இறால் மற்றும் மீன் பண்ணையாளர்களும், மற்றும் 30 மீன், இறால் வளர்ப்பை சார்ந்த நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், இந்த விழாவில் மீன்வளத்துறை மண்டல இணை இயக்குனர் மற்றும் உதவி இயக்குனர், மீன், இறால் தீவன உற்பத்தி நிறுவனங்களின் அதிகாரிகள், பண்ணை இடு பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் முகவர்கள், மத்திய, மாநில அரசு நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.







முதல்வர்,
டாக்டர். எம். ஜி. ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தலைஞாயிறு